2022 மே 4]

அங்கு பால் குளிரூட்டும் நிலையத்தை (BMC) உருவாக்கித் தர அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

சுற்றுச்சுவர்

***4377—திரு. கே.எஸ். சரவணக்குமார்:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, கீழவடகரை ஊராட்சி, அழகர்சாமிபுரத்தில் உள்ள ஈக்தா எனும் பெருந்திடலுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் மேற்பார்வையில் உள்ள மசூதிகள், மதரஸாக்கள் மற்றும் தர்காக்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கு மற்றும் புனரமைப்பதற்குத் தமிழ்நாடு அரசால் 1999 ஆம் ஆண்டு முதல் பெருமராமத்து மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கீழவடகரை அழகர்சாமிபுரத்தில் பெருநாள் தொழுகை அன்று அனைத்து பள்ளிவாசல்களும் சேர்ந்து தொழும் ஈக்தா எனும் பெருந்திடலுக்குச் சுற்றுச்சுவர் கட்ட பள்ளிவாசலின் நிருவாகம் தமிழ்நாடு வக்ஃப் வாரிய நிருவாகத்தின்மூலம் விண்ணப்பித்தால் அரசு வழங்கும் மராமத்து மானியம் பெற வழிவகை உண்டு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2022 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடங்களில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணிக்கு வழிவகை செய்யப்படுவதற்கான ஆலோசனை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் துறை சார்பாகக் கோரப்பட்டுள்ளது. அந்த ஆலோசனையைப் பெற்றவுடன் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்யலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.

திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலினத்தவர் மற்றும் இஸ்லாமியர்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் தற்போது அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. எனவே, ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் வக்ஃப் வாரியத்தின்மூலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 மே 4]

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக, 70 நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு 6 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பதிவு செய்யப்படாமலிருக்கின்ற நிறுவனங்களில் வக்ஃப் வாரிய சொத்தினைப் பதிவு செய்தால், மத்திய வக்ஃப் வாரியத்தின் மூலமாகவும் அதற்கு 75 விழுக்காடு நிதியினைப் பெற்றுக் கொடுத்து, மாநில அரசும் அதில் இணைந்து வருவாய் ஈட்டுகின்ற வகையில் அந்தச் சொத்துகளைப் பாதுகாக்கின்ற வாய்ப்புகள் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

220—

விளையாட்டு மைதானம்

***12165—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், ஏந்தல் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏந்தல் ஊராட்சியில் கைப்பந்து மைதானம், கபடி விளையாட்டுக்கான திடல், அதேபோன்று இறகுப் பந்து மைதானம் ஆகியவற்றிற்கு அந்தப் பகுதியில் ஒரு திறந்தவெளி உடற்பயிற்சி மையம்

TRUTH ALONE TRIUMPHS